சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – 2008–2009–ஆம் கல்வியாண்டு முதல் பி.இ./பி.டெக். முதலாமாண்டு பட்டப் படிப்பு பிரிவுகளுக்கான மாணவர் சேர்க்கை – மருத்துவ கல்லூரி மாணவர் சேர்க்கை – இரு கலந்தாய்வு மூலமாக ஒதுக்கீடு செய்வதால் இடங்கள் காலியாக இருப்பதை தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.160 நாள் 22.5.2008.

வைகாசி 9,
திருவள்ளுவர் ஆண்டு 2039.

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (நிலை) எண்.188, உயர்கல்வித்துறை, நாள் 19.6.2007.
2) தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் எண்.3866/ ECA-1/2008/Medical seat surrender, நாள் 17.3.2008.

------

ஆணை:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2007–2008–ஆம் கல்வியாண்டில் மருத்துவக் கல்லூரி கலந்தாய்வில் கலந்துகொண்டு இட ஒதுக்கீடு பெற்று, பின்னர் அண்ணா பல்கலைக்கழகம், சென்னை, பொறியியற் கல்லூரி கலந்தாய்வில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பி.இ./பி.டெக். பாடப்பிரிவுகளில் சேர விரும்பினால், தாங்கள் மருத்துவக் கல்லூரியில் பெற்ற இடத்தினை ஒப்படை செய்து, எழுதித்தர வேண்டும் என்றும் இது தொடர்பாக மருத்துவக் கல்லூரி கலந்தாய்வில் இட ஒதுக்கீடு பெற்ற மாணவர்களின் பெயர் பட்டியலை பொறியியற் கல்லூரி கலந்தாய்வு தொடங்குமுன் செயலாளர், தமிழ்நாடு பொறியியற் கல்லூரி மாணவர் சேர்க்கை, 2007, அண்ணா பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும் எனச் செயலாளர், தேர்வுக்குழு, மருத்துவக் கல்லூரி அவர்களை அறிவுறுத்தியும் அரசு ஆணையிட்டது.

2. மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்ட நெறிமுறைகள் 2007–2008–ஆம் கல்வியாண்டிற்கான பொறியியற் சேர்க்கையின்போது முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டது என்றும் இந்நடைமுறையால் பொறியியல் கல்லூரியில் காலியிடம் ஏற்படுவது வெகுவாக குறைக்கப்பட்டது என்றும் 2007–2008–ஆம் கல்வியாண்டில் 111 மாணவர்கள் (எம்.பி.பி.எஸ் 90, பி.டி.எஸ் 21) மருத்துவக் கல்லூரியில் ஒதுக்கீடு பெற்று பின்னர் தங்கள் ஒதுக்கீட்டு ஆணையை சரண் செய்து பொறியியல் கல்லூரி கலந்தாய்வில் ஒதுக்கீடு பெற்றுள்ளனர் என்றும் இதனால் நல்ல மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் அவர்கள் விரும்பும் பாடப்பிரிவு / கல்லூரி பெறுவது உறுதியாக்கப்பட்டுள்ளது என்றும் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் தெரிவித்து, இக் கல்வியாண்டு முதல் (2008–2009), மருத்துவக் கல்லூரி கலந்தாய்வில் கலந்துகொண்டு இட ஒதுக்கீடு பெற்று, பின்னர் அண்ணா பல்கலைக்கழகம், சென்னை, பொறியியல் கல்லூரி கலந்தாய்வில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பி.இ./பி.டெக். பாடப்பிரிவுகளில் சேர விரும்பினால், தாங்கள் மருத்துவக் கல்லூரியில் பெற்ற இடத்தினை ஒப்படை செய்து எழுதித்தர வேண்டும் என நிலையான ஆணை பிறப்பிக்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் இது தொடர்பாக மருத்துவக் கல்லூரி கலந்தாய்வில் இட ஒதுக்கீடு பெற்ற மாணவர்களின் பெயர் பட்டியலை பொறியியற் கல்லூரி கலந்தாய்வு தொடங்குமுன் செயலாளர், தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–க்கு அனுப்பி வைக்க வேண்டும்

எனச் செயலாளர், தேர்வுக்குழு மருத்துவக் கல்லூரி அவர்களை கேட்டுக் கொள்ளலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளார்.

3. மேற்கண்ட தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கோரிக்கையை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, 2008–2009–ம் கல்வியாண்டு முதல் மருத்துவக் கல்லூரி கலந்தாய்வில் கலந்துகொண்டு இட ஒதுக்கீடு பெற்று, பின்னர் அண்ணா பல்கலைக்கழகம், சென்னை, பொறியியல் கல்லூரி கலந்தாய்வில் கலந்துகொள்ளும் மாணவர்கள் பி.இ./பி.டெக். பாடப்பிரிவுகளில் சேர விரும்பினால், தாங்கள் மருத்துவக் கல்லூரியில் பெற்ற இடத்தினை ஒப்படை செய்து எழுதித்தர வேண்டும் என ஆணை வெளியிடலாம் என்றும், மேலும் இது தொடர்பாக மருத்துவக் கல்லூரி கலந்தாய்வில் இட ஒதுக்கீடு பெற்ற மாணவர்களின் பெயர் பட்டியலை பொறியியற் கல்லூரி கலந்தாய்வு தொடங்குமுன் செயலாளர், தமிழ்நாடு பொறியியல் மாணவர் சேர்க்கை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–க்கு அனுப்பி வைக்க வேண்டும் எனச் செயலாளர், தேர்வுக்குழு, மருத்துவக் கல்லூரி அவர்களை கேட்டுக் கொள்ளலாம் என்றும் முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
மருத்துவக் கல்லூரி இயக்குநர், சென்னை–10.
நகல்
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / திருநெல்வேலி.
செயலாளர், தமிழ்நாடு பொறியியல் கல்லூரி மாணவர் சேர்கை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25.
செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வி அமைச்சர் அவர்களில் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.